**ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை - 2024**

---------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 7,943,167 ஆக இருந்த போதும் அது 11,906,368 ஆக ரூபா 3,963,200 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது சரியாக கணக்கீடு செய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஆரச்சிக்கட்டுவ மற்றும் அங்குணவில நூலக அபிவிருத்தி மற்றும் வைரன்கட்டுவ வீதி அபிவிருத்தி சேவைகளுக்காக உள்ளூராட்சி திணைக்களத் திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,900,000 கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் மூலதனப் பெறுவனவுகள் மற்றும் மூலதன செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,900,000 எதிர்வரும் ஆண்டின் போது மூலதனப் பெறுவனவாக நாட்குறிப்பின் மூலம் சரிசெய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

#### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நானாவித கடன்பட்டோர் ரூபா 373,007 மற்றும் ஆதனக் கடன் வட்டி ரூபா 447,331 என்பவற்றை | அது தொடர்பாக போதியளவான தகவல்கள் எமது சபையிடம் காணப்படாமையினால் அந்த | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய எழுத்துமூல சான்றுகள் |

| | | |
|---|---|---|
| உறுதிப்படுத்துவதற்காக கடன்பட்டோர் விபரம், மீதி உறுதிப்படுத்தல் மற்றும் வட்டி பட்டோலைகள் சமர்ப்பிக்காமையின் காரணமாக திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | மீதியை அறவிடுவதற்காக உள்ளூராட்சி திணைக்களத்திற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| | நிதிப்பிரமாணம் 571(2) | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 1,448,340 ஆன வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. | இந்த ஆண்டிற்குரிய வைப்புக்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவ்வாறு விடுவிப்பதற்கு முடியாத வைப்புக்களை சபையின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பணி நடைமுறைக் கோவை | | | |
| | 06 ஆம் பந்தி | அசைவுறாத ஆதனங்களைப் பாதுகாப்பதற்காக சபைக்குச் சொந்தமான ஆதனங்களை அளவிட்டு எல்லையினை உறுதிப்படுத்துதல், பாதுகாப்பு வேலியினை அமைத்தல், அசைவுறுாத ஆதனங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மற்றும் தெரிவுப் பரிசோதனைகள் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அசைவுறாத ஆதனங்களைப் பாதுகாப்பதற்காக வேலி நிர்மாணித்து அதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | சபை ஆதனங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) 2019 சனவரி 10 ஆம் திகதிய இலக்கம் வ.ப.பா.தே/01/11/4/01 என்ற உள்ளூராட்சி ஆணையாளரின் (வட மேல்) சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி | சபைக்குச் சொந்தமான 05 கடைகள் எழுத்து மூல உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் வாடகைக்கு வழங்கப்பட்டதுடன் 03 சடைகளுக்காக கைச்சாத் திடப்பட்ட உடன்படிக்கைகளின் உடன்படிக்கை தரப்பினரின் பெயர், பொது முத்திரை, கையொப்பம் போன்ற தகவல்கள் காணப்படாமல் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. | உரிய கடைகளுக்காக மீண்டும் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் உடன்படிக்கையில் கையொப்பமிடப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 43,734,653 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,000,888 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| i. | ஆதன வரியும் வரியும் | 7,891 | 8,338 | 11,264 | 13,559 | 7,752 | 8,080 | 4,297 | 14,081 |
| ii. | வாடகை | 7,997 | 8,470 | 8,500 | 1,910 | 7,003 | 9,834 | 9,363 | 2,014 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,201 | 5,191 | 8,027 | - | 1,022 | 3,664 | 530 | 3,363 |
| iv. | ஏனைய வருமானம் | 3,395 | 14,361 | 14,361 | - | 1,043 | 13,990 | 15,899 | - |
| | மொத்தம் | 21,484 | 36,360 | 42,152 | 15,469 | 16,820 | 35,568 | 30,089 | 19,458 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| i. | 2025 மார்ச் 31 இல் உள்ளவாறு வாடகை நிலுவை ரூபா 12,415,509 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 03 வருடங்களை விஞ்சிய ரூபா 5,484,322 நிலுவை மீதியும் 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான ரூபா 5,835,686 நிலுவை மீதியும் காணப்பட்டது. | நிகழ்ச்சித் திட்டங்கள், கள பரிசோதனைகள் மூலம் எதிர் காலத்தில் நிலுவையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஆதன வரியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | சபையினால் 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனவரி மீள்திருத்தம் செய்ய வேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் ஆதனவரி மதிப்பீட்டின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டு வரை ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. | புதிய ஆதனவரி மதிப்பீட்டிற்குரிய மதிப்பீட்டுப் பட்டோலை 2025 ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் மதிப்பீட்டுத் திணைக்களத்தில் இருந்து எமது நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதுடன் 2026 ஆம் ஆண்டு முதல் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலரீதியில் ஆதன வரி மதிப்பீட்டை மேற்கொண்டு ஆதன வரி அறவிடப்படல் வேண்டும். |
| iii. | 2025 மார்ச் 31 இல் உள்ளவாறு காணி உரிமை யாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ஏக்கர் வரித் தொகை ரூபா 368,036 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் ரூபா 329,185 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற நிலுவை மீதியாக இருந்தது. | ஏக்கர் வரி உரிமையாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்து நிலுவையை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஏக்கர் வரியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iv. | மீளாய்வாண்டிலன் திசம்பர் 31 இல் உள்ளவாறு நீர் வரி நிலுவை மீதி ரூபா 678,598 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் ரூபா 545,858 தொகை 01 இற்கும் 05 வருடங்கள் வரையிலான காலத்தில் இருந்து அறவிட வேண்டிய மீதியாகும். | ஊழியர் வெற்றிடம் இதற்காக பிரதான காரணமாக இருந்ததுடன் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் அறவிட வேண்டியிருந்த நிலுவை நீர் மீதியை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவசதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| | 2025 மார்ச் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 1,909,629 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 01 வருடத்திற்கு மேற்பட்ட 05 வருடங்களுக்கு குறைந்த ரூபா 537,075 நிலுவை மீதியும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,337,805 நிலுவை மீதியும் காணப்பட்டது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு உரிய சட்ட ரீதியான நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படும். | நிலுவைக் கடடை வாடகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டில் சபைக்குச் சொந்தமான காணிகளைப் பகிரங்கப்படுத்துவதற்காக ரூபா 97,500 செலவில் 15 பெயர் பதாதைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தப் பெயர் பதாதைகள் காணிகளில் பொருத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப் பட்டுள்ள பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக் காணிகளின் உரித்தை உறுதிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,816,365 ஆக இருந்ததுடன் அதில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,130,383 மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை எதிர்காலத்தில் செலுத்தி தீர்ப்பதுடன் மேலதிகமாக கடன் கொடுத்தோரிடமிருந்து கிடைத்த பணம், உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் மூலம் வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனைகளைப் பெற்று கடன்கொடுத்தோர் ஏட்டில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பை உறுப்படுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் நிருவகிக்கப்படுகின்ற 31 காணி, மயான நிலங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான காணிகளை கையேற்றல் தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப் பட்டுள்ளது. மீண்டும் கோருவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கையேற்கப்படாத ஆதனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1999 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளின் போது காணிகளைக் கூறுகளாக்கி விற்பனை செய்யும் போது பொது வசதிகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த 01 ஏக்கர் 03 றூட் 11 பேர்ச் அளவான 02 காணிக் கூறுகளின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான காணிகளை கையேற்றல் தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப் பட்டுள்ளது. மீண்டும் கோருவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | காணிகளின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் மூன்றாம் தரத்தில் பதவிகள் மற்றும் இரண்டாம் தரத்தில் 12 பதவிகள் மற்றும் ஆரம்ப தரத்தில் 14 பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் இரண்டாம் தரத்தின் பதவிகளில் 03 மிகை காணப்பட்டது. | வெற்றிடயங்களை நிரப்புவதற்காக பல தடவை கோரப்பட்டிருந்த போதும் இது வரையிலும் வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை. மிகையான 03 பதவிகள் இருந்த போதும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் வெற்றிடம் காணப்பட்டமையால் மிகையான 03 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சேவையை விட்டுச் சென்ற மற்றும் இடமாற்றலாகிச் சென்ற 03 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 151,916 கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்விலை. | ஊழியர் கடன் மீதிகளை அறவிடுவதற்கோ அல்லது கைவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிட வேண்டிய ஊழியர் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் மக்களுக்கு சேவையினை வழங்கும் நோக்கில் மீளாய்வாண்டில் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் 27 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 6,269,500 மொத்த நிதி ஏற்பாடும் உரிய பணிகளை நிறை வேற்றுவதற்காக பயன்படுத்தப்பட வில்லை. | உரிய நிகழ்ச்சித்திட்டங்களை எதிர் வரும் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீடு செய்யப்பட்ட வேலைகளை குறித்துரைத்த கால எல்லையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசனப் பசளை உற்பத்தி செய்வதற்காக சபைக்கு சொந்தமான கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையமொன்று காணப்படாதிருந்ததுடன் மாதாந்தம் சேகரிக்கப்படுகின்ற 75 தொன் அளவிலான உக்கும் கழிவுப் பொருட்கள் தனியாரின் சில காணிகளில் போடப்பட்டிருந்ததுடன் உக்காத கழிவுப் பொருட்களை அரைத்து கூறுகளாக்கி விற்பனை செய்யப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | கழிவுகள் பிரித்து சேகரிக்கப்படுகின் றமையால் உக்குகின்ற கழிவுப் பொருட்கள் காணி உரிமையாளரின் கோரிக்கையின் அடிப்படையில் அந்தக் காணிகளில் போடப்படுவதுடன் உக்காத கழிவுப் பொருட்கள் கூறுகளாக்கி விற்பனை செய்யப்படுகின்றது. | கழிவுப் பொருள் முகாமைமத்துவத்தை முறையாக மேற்கொள்ளல் வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2023 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக 10 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக 12 இலக்குகள் இனங்காணப்பட்டிருந்தது. அந்த நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான 35 நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்ததுடன் அந்த நிகழ்ச்சித் திட்டங்களில் 14 நிகழ்ச்சித் திட்டங்களை ஆண்டில் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | சில நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்காதிருந்ததுடன் சில நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் காலப்பகுதி போதியளவு இல்லாமையினால் அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் கடன் கொடுத்தோராக்கப்பட்டு 2025 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |